**கவனிக்க.-** 2007.04.27 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1496 - 2007 මැයි 04 වැනි සිකුරාදා - 2007.05.04

1496 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 356 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 357 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 357 |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 358 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம் (நீக்கல்) சட்டமூலம் 2007, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஹெவிஜ் நம்பிக்கைப் பொறுப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேத போதனா வைத்தியசாலை (கைமாற்றல்) சட்டமூலம் 2007, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மே 11 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஏப்பிறல் 27 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2007 இன் இல. 163

இல. : டீ/ஏஎவ்/8/1.

**இலங்கை வான் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவருடைய பெயரின் முன்னே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து நிரந்தர வான் கொமதோர் பதவிக்கு உயர்த்தப்படுகிறார்.

தற்காலிக வான் கொமதோர் இலங்கரத்ன பிரேமநாத் புத்திவிமல லியனகே (01285) தொழி/பொறி - 2006.08.24

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஒற்றோபர் 18.

5-34

---

2007 இன் இல. 164

இல. : டீ/ஏஎவ்/8/1.

**இலங்கை வான் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவருடைய பெயரின் முன்னே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து தற்காலிக எயார் கொமதோர் பதவிக்கு உயர்த்தப்படுகிறார்.

குழுக் கப்ரின் இலங்கரத்ன பிரேமநாத் புத்திவிமல லியனகே, (01285) தொழி/பொறி - 2006.01.01

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 2.

5-35

2007 இன் இல. 165

இல. : டீ/ஏஎவ்/9/1.

**இலங்கை வான் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர், அவர்களுடைய பெயர்களின் முன்னே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து தற்காலிக குளுக் கப்ரின் பதவிகளுக்கு உயர்த்தப்படுகிறார்கள் :-

விங் கொமாண்டர் அஜித் கொட்வின் நதானியல்ஸ் (01419) நிர்/ரெஜி - 2005.10.26
விங் கொமாண்டர் yவித் ஸ்ரீ லால் அபேசேக்கர (01441) நிர்/ரெஜி - 2006.01.01

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஒற்றோபர் 18.

5-31

---

இல. : டீ/ஏஎவ்/539.

**இலங்கை வான் படை - நிரந்தர வான் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை திருத்தம் செய்தல்

பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தரை அதிகார வாணைக்கு நியமனம் செய்தலும் கிளைக்கு உள்ளடக்குதலும் பற்றிய 1998 திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1058 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1998 இன் இலக்கம் 664 ஆம் அறிவித்தலில் பின்வரும் விதத்தில் திருத்தம் செய்யப்படுகின்றது :-

1997 மாச்சு மாதம் 5 ஆந் திகதியிலிருந்து பின்வரும் கடெற் உத்தியோகத்தர் இலங்கை வான் படையின் ப்ளையிங் ஒபிசர் பதவிக்கு நியமனம் செய்தலும் அன்றிலிருந்து அவருடைய பெயரின் முன்னே உள்ள கிளைக்குழு உள்ளடக்குதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது :-

கெடெற் உத்தியோகத்தர் உப்புல் சஞ்ஜ லொரென்சு தொட்டஹேவகே (01972) - தொழி/பொறி

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, மே 23.

5-32

---

2007 இன் இல. 166

இல. : டீ/ஏஎவ்/521.

**இலங்கை தொண்டர் - வான் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனமும் கிளைக்கு உள்ளடக்குதலும்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவரின் பெயரின் முன்னே உள்ள திகதிலிருந்து இலங்கை தொண்டர் வான் படையின் அதிகார வகுப்பு லெப்டினன்ட் ஒருவராக நியமனம் செய்தலும் அன்றிலிருந்து பெயரின் முன்னே குறிப்பிடப்பட்டுள்ள கிளைக்கு உள்ளடக்குதலையும் அங்கீகரிப்பதில் அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் களி கூர்ந்துள்ளார்கள் :-

பலவத்த விதானலாகே ருவினி ரசிக்கா பெரேரா, ஸ்/0501 ப்ளையிட் லெப்டினன்ட் வைத்திய 2006.01.12

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 1.

5-33

---

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2007 இன் இல. 167

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :-

செல்வி கே. ரீ. எம். என். த சில்வா அவர்கள் 2006, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறு கட்டளை பிறப்பிக்கும் வரை வர்த்தகப் பணிப்பாளர் நாயகமாக.

டீ. விஜேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

5-67

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## அறிவித்தல்

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 5 (5) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களை பிரயோகித்து கீழ்க்காணும் உறுப்பினரை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து உடனடியாக செயல்படும் விதத்தில் அகற்றுகின்றேன் :-

எல். அபேகுணசேகர,
“அபேசிறி”, கோணவல,
களனி.

ஏ. எல். எம். அதாஉல்லா,
நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு
இல. 34, நாராஹேன்பிட்டி வீதி,
நாவலை.
2007, ஏப்பிறல் 17.

5- 41/1

### அறிவித்தல்

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 5 (5) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களை பிரயோகித்து கீழ்க்காணும் உறுப்பினரை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து உடனடியாக செயல்படும் விதத்தில் அகற்றுகின்றேன்.

எஸ். கே. எஸ். எச். கே. சூரியாராச்சி,
இல. 423/8, ஸமகி மாவத்தை,
உடஹமுல்ல,
நுகேகொடை.

ஏ. எல். எம். அதாஉல்லா,
நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு
இல. 34, நாராஹேன்பிட்டி வீதி,
நாவலை.
2007, ஏப்பிறல் 17.

5- 41/2

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### றுஹுணு அபிவிருத்தி வங்கி-மொரவக கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிட்டுக் கொள்ளல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின்கீழ், 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட அரச வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுணு அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் படியும் றுஹுணு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

2007.01.23 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுணு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது :-

"றுஹுணு அபிவிருத்தி வங்கிச் சட்டத்தரணியும் பிரசித்தி பெற்ற நொத்தாரிசு மொஹான் எல். ஜீ. கமாச்சி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.05.10 ஆந் திகதிக்குரிய 5867 ஆம் இலக்க ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்தல், அபலாதெனிய, ஈதண்டுகிட தல்கஸ்வத்தயில் வசிக்கும் ரூபசிங்க சிறிவர்தன டெனியும், அருமப்பெரும கங்கானம்கே பியல் சந்தன என்பவர்களினால் செலுத்தாதுவிடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் நான்கு இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது ரூபா (ரூ. 4,83,960) க்கான பணம் றுஹுணு அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிருப்பதாலும், 2006.11.09 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 21.5% படி நான்கு இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது ரூபா (ரூ. 4,83,960) க்கான பணத்துக்காக ஏலவிற்பனைத் திகதியிலிருந்து இன்னும் வட்டியும் ஏலவிற்பனைச் செலவும் சேர்த்து ஏதாவதொரு செலவுகள் செய்திருப்பின் அவற்றைக் குறைத்துக் கொண்டும், அப்பணத்தை அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் 5867 ஆம் இலக்க ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள், ஏனையவற்றுடன் பிரசித்திபெற்ற ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபையினால் இதில் தீர்மானிக்கப்பட்டது."

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்திலே, மொரவக் கோரளேயின் பிடபெத்தர பிரதேச செயலகத்தின் அலபாதெனிய கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட ஈதண்டுகித ஊரில் அமைந்துள்ள சர்வே ஜனராலினால் ஒருங்கிணைத்த அகபி 25 இல் ஒருங்கிணைக்கப்பட்ட மஹஅரம்பஹேன எனும் வடக்கு : டீ. ஏ. கே. ஜேமிஸ் அப்புவின் காணியும் ; கிழக்கு : கே. எஸ். ரூபசிங்ஹவின் காணியும் ; தெற்கு : ஆர். ஜே. ஸமன்கே காணியும் ; மேற்கு : எஸ். எஸ். ரூபசிங்ஹ அவர்களின் காணியும் எல்லையாக அமைந்த இரண்டு ஏக்கர் ஒரு றூட் (2ஏ. 1றூ. 0பே.) எனும் மிகப்பெரிய காணியில் அமைந்துள்ள அனைத்து பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள், கட்டிடங்கள் போன்ற அனைத்துமாகும். (மார 5/பிர/32488 உம் 1966.03.05) எனும் காணியின் அகபி 25 இல் துணை இலக்கம் 8 இன்படி படிவ இலக்கம் 13 இல் குறிப்பிட்டிருக்கும்.

மேலே குறிப்பிட்ட ஈதண்டுகிதயில் அமைந்துள்ள சர்வே ஜனரால் அவர்களின் ஒருங்கிணைந்த அகபி 25 இல் இலக்கம் 617 என்ற துண்டும் வடக்கு : அகபி 25 இன் இலக்கம் 618 என்ற துண்டும் ; கிழக்கு: அகபி 25 இல் இலக்கம் 614 என்ற பாதையும் ; தெற்கு : மஹ இரம்பே கால்வாயும் காப்புறுதியும், அகபி 25 இல் இலக்கம் 618 என்ற துண்டும்; மேற்கு : அகபி 25 இல் இலக்கம் 620 என்ற துண்டும் எல்லையாகக் கொண்டு இரண்டு ஏக்கர் ஒரு றூட் (2ஏ. 1றூ. 0பே.) கொண்ட மிகப்பெரிய நிலத்தில் உள்ள அனைத்துமரங்கள், பழவர்க்கங்கள், கட்டிடங்கள் போன்றனவாகும். இவ்வாதனம் எல்டீஓ 8/27 இன் கீழ்

2006.05.10 ஆந் திகதி மொரவக காணிப்பதிவு அலுவலகத்தில் பதியப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. ஜீ. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

றுஹுண அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.

5-68/1

---

### றுஹுன அபிவிருத்தி வங்கி - வெலிகம கிளை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின் கீழ் றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கியின் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதியின் அதி விஷேட வர்த்தானிப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் பிரகாரமும், 2005.10.26 ஆந் திகதியின் நடாத்தப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது :-

"றுஹுண அபிவிருத்தி வங்கிக்கு பிரசித்திபெற்ற சட்டத்தரணியும் நொத்தாரிசுமான திலக் கருணாநாயக அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.04.06 ஆந் திகதிக்குரிய இலக்கம் 616 ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்தல் மிரிஸ்ஸ வடக்கு 'யமுனா' இல் வசிக்கும் மஹகமகே லக்மால் விசான்தயும், ரெசானி சாலிகா அதுகோரால என்பவரினால் செலுத்தாதுவிடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ரூபா தொண்ணூற்றேழாயிரத்து முந்நூறு (ரூபா 97,300) க்கான பணம் றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு செலுத்த வேண்டியிருப்பதாகவும், 2005.01.01 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 21.5% படி ரூபா தொண்ணூற்றேழா யிரத்து முந்நூறு (ரூபா 97,300) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து வட்டியும் சேர்த்து ஏலவிற்பனை செலவும், இதர செலவுகளும் செய்திருப்பின் அவற்றை குறைத்துக்கொண்டும் அவற்றை அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 616 என்ற ஈட்டுப் பத்திரத்தின்கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள், ஏனையவற்றுடன் வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது."

#### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெலிகம்கோரலேயில் வெலிகம நகரசபைக்குள் வெலிகம ஹெட்டிவீதியில் அமைந்துள்ள பண்டாரநாயக மாவத்தையில் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் மேலதிக சரியானதென அக்ரபோதி மாவத்தையில் இலக்கம் 1872 இலக்கம் 1/24 என்ற வெஹெரபல்லேகலயில் வயல், வெஹெரபல்லே மத்திய வயல் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 01 யும், 02 என்ற ஒன்றிணைக்கப்பட்ட காணியை பிரித்து வேறாக்கப்பட்ட 'டீ' எழுத்தைக் கொண்ட துண்டை மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட 'ஈ 1' எழுத்தைக்கொண்ட துண்டின் எல்லையாக வடக்கே: இலக்கம் 4350 வரைபடத்தின் காட்டிய இக்காணியின் 'பீ' துண்டின் இலக்கம் ; கிழக்கே: இக்காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 03 உம், இலக்கம் 04 என்ற துண்டும் ; தெற்கே : இலக்கம் 309 என்ற வரைபடத்தின் பிரகாரம்பிரித்து வேறாக்கப்பட்ட இக்காணியின் ஈ2 என்ற துண்டும் ; மேற்கே : இலக்கம் 4350 வரைபடத்தில் காட்டிய 'சீ' எழுத்தைக்கொண்ட (அடி 15 அகன்ற பாதையும்) துண்டும் என இதில் பேர்ச்சஸ் பத்தொன்பது (0ஏ. 0றூ. 19பே.) எனும் மிகப்பெரிய காணியின் அனைத்து மரங்கள், பழவர்க்கங்கள், அனைத்துமாகும். இக்காணி மாத்தறை காணிப் பதிவு அலுவலகத்திலே டீ 960/201 இல் 2004.04.12 ஆந் திகதி பதியப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. ஜீ. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

றுஹுன அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம், பம்புரன,
மாத்தறை.

5-68/2

---

### றுஹுன அபிவிருத்தி வங்கி - கரன்தெனிய கிளை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின் கீழ் றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதியின் அதி விஷேட வர்த்தானிப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் படியும், 2006.08.08 ஆந் திகதியின் நடாத்தப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது :-

"றுஹுண அபிவிருத்தி வங்கிக்கு பிரசித்திபெற்ற சட்டத்தரணியும் நொத்தாரசும் டீ. எம். வெய்ஹேன மற்றும் பிரசித்த நொத்தாரிசு திரு. எஸ். எம். பி. டீ. சில்வா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000.08.22 ஆந் திகதியும் 2003.06.06 ஆந் திகதிய முறையே இலக்கம் 32 ஆம் இலக்கம் 2064 எனும் ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்துதல் அம்பலன்கொட, மாதம்பே, சுதுவெலிகட வீதி, 'தம்மிக' எனும் முகவரியில் வசிக்கும் திரிமாதுர தமித் தம்மிக மெண்டிஸ் விஜேரத்ன என்போரினால் செலுத்தாதுவிடப்பட்டதாகவும், அவ்

ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஐயாயிரத்து அறுநூற்று ஒன்பது (ரூபா 2,55,609) க்கான பணமும், ரூபா நாற்பத்தெட்டாயிரத்து இருநூறு (ரூபா 48,200) க்கான பணம் றுஹுண அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2004.11.19 ஆந் திகதியிலிருந்தும் 2004.08.31 ஆந் திகதியிலிருந்து முறையே வருடத்திற்கு 20.5% உம் 24% படி ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஐயாயிரத்து அறுநூற்று ஒன்பது (ரூபா 2,55,609) க்கான பணமும், ரூபா நாற்பத்தெட்டாயிரத்து இருநூறு (ரூபா 48,200) க்கான பணத்துக்காக ஏலவிற்பனை திகதியிலிருந்து இன்னும் வட்டியுடன் ஏலவிற்பனை செலவும் சேர்த்து வேறு ஏதாவதொரு செலவுகள் செய்திருப்பின் அவற்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 32 உம் இலக்கம் 2064 க்கான ஈட்டுப்பத்திரத்தின்கீழ் ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களும், ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது."

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்**

தென் மாகாணத்தின், காலி மாவட்டத்திலே வெல்லபடபத்துவையில் மாதம்பே, இடன்தொட, சுதுவெலிகடயில் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற மானக எஸ். பிரிதி வீரவர்தன என்பவரினால் 1998 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட இலக்கம் 636 என்ற வரைபடத்தின் பிரகாரம் பெலவத்தேயில் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 03 என்ற துண்டென வடக்கே : ஹுனுபிடியவும் ; கிழக்கே : போகஹவத்தயும் ; தெற்கே : இலக்கம் 04 உம் தொடகமுவே எத்தன்கேவத்தயும் ; மேற்கே : இக் காணியின் இலக்கம் 02 எனும் துண்டும், எல்லையாகக் கொண்ட, ஒரு ரூட் ஒன்று தசம் ஆறு பர்ச்சஸ் (0ஏ.01றூ.1.6பே.) கொண்ட மிகப்பெரிய காணியின் முழு நிலமும், அதற்குரிய அனைத்து மரங்கள், பழவர்க்கங்கள் போன்றவையாகும். (இரண்டாம் கடன் பணம் பற்றி இக்காணியின் உரிமையாளர் உரிமையை ஈடுவைக்கப்பட்டிருக்கும்) இக்காணி காலி காணிப் பதிவு அலுவலகத்தில் ஸீ 711/236 க்கு கீழ் 2003.06.09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருக்கும்.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. ஜீ. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

றுஹுன அபிவிருத்தி வங்கி,
பிரதான தலைமை அலுவலகம்,
பம்புரன, மாத்தறை.

5-68/3

---

**றுஹுன அபிவிருத்தி வங்கி - கெகனதுர கிளை**

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 வது அதிகாரத்தின் கீழ் றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்.*

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச வங்கி சட்டத்தின் கீழ் இலங்கை நிதிச்சபையினால் வெளியிடப்பட்ட 1998.04. 24 ஆந் திகதியின் அரச வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்கவும், உருவாக்கப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் படியும், 2004.06.09 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது :-

"றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு பிரசித்திபெற்ற நொதாரிசும் சட்டத்தரணியுமான சந்திரகுமார விஜேகுனவர்த்தன அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998.10.23 ஆந் திகதியின் இலக்கம் 16432 என்ற ஈட்டுப்பத்திரத்தின் கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்தல் தெவிநுவர கபுகம (மேற்கு) 'தயாவாஸ' இல் வசிக்கும் சிங்கப்புலி ஆரச்சிகே ஜகத் சந்திரகுமார என்பவரினால் அறவிடவேண்டிய பணம் செலுத்தாது விடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 1,88,500) க்கான பணம் றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2001.08.31 ஆம் திகதியிலிருந்து வருடத்திற்கு 23% படி ஒரு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 1,88,500) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து இன்னும் வட்டியும் சேர்த்து ஏலவிற்பனை செலவும், அத்துடன் ஏதாவதொரு செலவுகள் செய்திருப்பின் அவற்றை குறைத்துக்கொண்டும், அப்பணத்தை அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு மாத்தறை ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 16432 ஈட்டுப்பத்திரத்தின் கீழ் வங்கிக்குக் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள், ஏனையவும் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனம்/ ஆதனத்தின் விவரணம்.**

01. தென்மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெல்லபட பத்துவையில் கபுகம யில் அமைந்துள்ள கொடகதுருகஹவத்த என்ற காணியின் பகுதியான மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் இலக்கம் 11960 என்ற வழக்கின் படி பிரித்து வேறாக்கப்பட்ட ('கே' 'உம்' 'எம்' எழுத்தை கொண்ட துண்டுகளினால் ஒருங்கிணைந்த காணியை மீண்டும் அளந்து பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 02 என்ற துண்டும் ஏ. டீ. பலிஹக்கார நிலஅளவையாளர்களின் இலக்கம் 9305யும் 1995.10.20 ஆந் திகதியின் வரைபடத்தின் பிரகாரம் எல்லையாக வடக்கும், கிழக்கும் : கும்பல்கமயிலிருந்து தெவிநுவர வரை செல்லும் பாதையும் ; தெற்கே : முலனே பிட்டெனையும் ; மேற்கே : இலக்கம் 9305 எனும் வரைபடத்தில் குறிப்பிட்டபடி இலக்கம் 01 என்ற துண்டும், இதில் பத்து தசம் ஒன்று நான்கு (0ஏ. 0றூ. 10.14பே.) மரங்கள், பழ வர்க்கங்கள் காணி போன்ற அனைத்துமாகும்.

இக்காணி மாத்தறை காணிபதிவு அலுவலகத்தின் பீ 537/27 இல் 1998.10.26 ஆந் திகதி பதியப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,

டீ. ஜீ. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

றுஹுன அபிவிருத்தி வங்கி,
பிரதான தலைமை அலுவலகம்,
பம்புரன, மாத்தறை.

5 - 68/4

### மக்கள் வங்கி

ஆதன ஏலவிற்பனை பற்றிய தீர்மானத்தின் திருத்தம்

மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1999.10.28 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2002.11.22 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் 2002.11.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் வெளியிடப்பட்ட ஹெட்டியாராச்சிகே டொன் கிறிஸ்டி நிமால் அப்புஹாமி என்பவரால் ஈடுவைக்கப்பட்ட ஆதனம் தொடர்பான தீர்மானத்தில் காணப்படும் ஆதனத்தின் விவரம் பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், திவுலபிட்டிய பெரும்பாக இறைவரி அலுவலர் பிரிவில் துணகஹா பற்று கஞரிப்புவ கிழக்கில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகம் தயாரித்த 1996, மார்ச் 10 ஆந் திகதிகொண்ட ஜீஏஎம் 2654 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 என அடையாளமிடப்பட்டதும் மில்லகஹாவத்தை என அழைக்கப்படுவதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட முழுக் காணித் துண்டினதும் குத்தகை உரிமை இதற்கு எல்லைகளாக - வடக்கில் : பாதை ; கிழக்கில் : பிரதான வீதி ; தெற்கில் : கா. சீ. ஆ. உரித்தாக்கிய மில்லகஹாவத்தை ; மேற்கில் : மெகினட் சப்ரமாது, எம். ஜோக்கினு அப்புஹாமி, ஜே. டீ. எஸ். சப்ரமாது ஆகியோர் உரிமைகோரும் மில்லகஹாவத்தை என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு சைவர் தசம் நாலு ஐந்து ஒன்று ஹெக்டேயர் (0.451 ஹெக்டேயர்). இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் ஈ767/71 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உதவிப் பொது முகாமையாளர்,
(மேற்கு வலயம் -01).

மக்கள் வங்கி,
வலய தலைமை அலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி, கொழும்பு 01.

5-70

---

### மக்கள் வங்கி - குருநாகல் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப்பணிப்பாளர் சபையால் 2005.10.26 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"திரு. திவாகர மொஹொட்டலாகே சுனில் சமரதிவாகர. திரு. திவாகர மொஹொட்டலாகே சிரிசேன என்பவர்களால் மக்கள் வங்கியின் சார்பில் குருநாகலில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிஸ் முறையே திரு. ஆர். எம். விஜேரத்ன, திருமதி அநுபமா முஹாந்திரம் என்பவர்களால் முறையே 1998.12.16 ஆந் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்ட 313 ஆம் இலக்க 2001. 02. 20 ஆந் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்ட 1292 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டு முறிகளின் மீது முறையே ஒரு இலட்சத்து பதினான்காயிரத்து எழுநூற்றி எண்பத்தி ஏழு ரூபா பதினொறு சதம் (ரூ. 1,17,787.11) இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 2,00,000) மக்கள் வங்கிக்கு வருமதியாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட ஒரு இலட்சத்து பதினான்காயிரத்து எழுநூற்றி எண்பத்தி ஏழு ரூபா பதினொறு சதம் (ரூ. 1,17,787.11) இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 2,00,000) அத்துடன் ஒரு இலட்சத்து பதினான்காயிரத்து எழுநூற்றி எண்பத்தி ஏழு ரூபா பதினொறு சதம் (ரூ. 1,17,787.11) மீது 2002.12.29 ஆந் திகதி முதல் ஏல விற்பனை திகதிவரை ஆண்டொன்றுக்கு (25%) இருபத்தி ஐந்து சதவிகிதப்படி வட்டியும், இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 2,00,000) மீது 2004.01.01 ஆந் திகதி முதல் ஏலவிற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு (30%) முப்பது சதவிகிதப்படி வட்டியும் ஏல விற்பனைச் செலவையும், அதன்பின்னர் கொடுப்பனவுகள் ஏதும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக்கழித்து அறவிடுவதற் காக சொல்லப்பட்ட 313ஆம் 1292 ஆம் இலக்க ஈட்டு முறிகளினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவும் குருநாகலையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் டப்ளியூ. எம். ஐ. கல்லேல்ல அவர்களால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 (L) எனும் பிரிவின் கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனம்/ ஆதனத்தின் விவரணம்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தெவமெதி ஹத்பத்துவ, வல்கம்பத்து கோரலை ஹுனுகும்புர என்ற கிராமத்தில் அமைந்துள்ள "ஹிடினாவத்தை அல்லது அரம்பேவத்தை" என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். பி. ஹேரத் அவர்களால் 1998. 09. 08 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 23/98 ஆம் இலக்க வரைபடத்தின் 01 என்ற இலக்க காணிக்கான எல்லைகள் - வட கிழக்கு : உத்தரவுபெற்ற நிள அளவையாளர் ஈ. டி. டெனியல் அவர்களால் 1925.12.29 ஆந் திகதி அளந்து தயாரிக்கப் பட்ட வரைபடத்தின் 09A 01 இலக்க காணி (தற்போது டி. எம். ஹேரத் பண்டாவினதும், டி. எம். பண்டா மெனிக்காவின் வாரிசுகள் உரிமைகோரும் காணி) தென் கிழக்கு : கிராம சபைப்பாதை தென்மேற்கு : பண்டாவின் காணி (தற்போது ஆர். எம். அப்புஹாமி உரிமைகோரும். காணி.)வட மேற்கு : உத்தரவுபெற்ற நிள அளவையாளர் ஈ. டி. டெனியல் அவர்களால் 1925.12.29 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட வரைபடத்தின் 09 ஆம் இலக்க காணி (தற்போது ஆர். எம். அபேரத்ன ஹுனுகும்புர, டி. எம். திஸாநாயக்க உரிமை கோரும் லிந்த கும்புர.), (தற்போது ஆர். எம். அப்புஹாமி உரிமைகோரும் வயல்.) என்ற எல்லைக்குட்பட்ட ஒரு ஏக்கர் ஒரு ரூட், இருபத்தி நான்கு பேர்ச் (01ஏ. 01ரூ. 24பே) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக.

மேற்கண்ட காணி கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணியிலிருந்து பிரித்து வேறாக்கப்பட்டதாகும்:-

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்துவ, வல்கம்பத்து கோரலை ஹுனுகும்புர என்ற கிராமத்தில் அமைந்துள்ள "ஹிடினாவத்தை அல்லது அரம்பேவத்தை" என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிள அளவையாளர் ஈ. டி. டெனியெல் அவர்களால் 1925.12.29 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட வரைபடத்தின் 01

என்ற இலக்க காணிக்கான எல்லைகள்- வடக்கு: மேற்கண்ட வரைபடத்தின் 09 உம், 09A ஆம் இலக்க காணிகள் ; கிழக்கு : உக்கு பண்டாவின் காணி ; தெற்கு : பண்டாவின் வயலும், உக்கு பண்டாவின் காணியும் ; மேற்கு : மேற்கண்ட வரைபடத்தின் 09 ஆம் இலக்க காணி என்ற எல்லைக்குட்பட்ட ஒரு ஏக்கர் ஒரு ரூட், இருபத்தி நான்கு பேர்ச்சஸ் (01ஏ. 01ரூ. 24பே) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக. (D 1151/122 - குருநாகல்).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச உதவி பொது முகாமையாளர்,
குருநாகல்/மாத்தளை.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 03 வத்ஹிமி வீதி,
குருநாகல்.

5 - 72

---

**மக்கள் வங்கி - பொல்கஹவெல கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப்பணிப்பாளர் சபையால் 2006.02.17 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"திரு. அரம்பேகெதர கிங்ஸ்லி சமரநாயக்க, திருமதி பதிரகே தோன நயனா மல்காந்தி என்பவர்களால் மக்கள் வங்கியின் சார்பில் குருநாகலில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி பி. எம். தயானி பெரேரா என்பவரால், 2003. 10. 06 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 702 ஆம் இலக்க ஈட்டு முறியின் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டு முறியின் மீது மூன்று இலட்சத்து தொண்ணூற்றி எட்டாயிரத்து எழுபத்தி ஒரு ரூபா இருபத்தி ஏழு சதம் (ரூ. 3,98,071.27), மக்கள் வங்கிக்கு வருமதியாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட மூன்று இலட்சத்து தொண்ணூற்றி எட்டாயிரத்து எழுபத்தி ஒரு ரூபா இருபத்தி ஏழு சதமும் (ரூ. 3,98,071.27) அத்துடன் மூன்று இலட்சத்து தொண்ணூற்றி எட்டாயிரத்து எழுபத்தி ஒரு ரூபா இருபத்தி ஏழு சதமும் (ரூ. 398,071.27) மீது 2004.11.07 ஆந் திகதி முதல் ஏல விற்பனை திகதி வரை ஆண்டொன்றுக்கு (18%) பதினெட்டு சதவிகிதப்படி வட்டியையும், சேர்ந்த தொகையில் ஏலவிற்பனைச் செலவையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் ஏதும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக குறிப்பிடப்பட்ட 702 ஆம் இலக்க ஈட்டு முறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனமும் வளவும் குருநாகலையைச்சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர். டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல அவர்களால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் எனும் பிரிவின் கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக் கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்.**

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோரலை, கந்தொலஹ பத்துவ, யடத்தாவள என்ற கிராமத்தில் அமைந்துள்ள "சனிமேட் எஸ்டேட்" என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிள அளவையாளர் டபிள்யூ. சி. எஸ். எம். அபேசேகர அவர்களால் 1996.09.30 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 139/96 ஆம் இலக்க வரைபடத்தின் 232 ஆம் இலக்க காணிக்கான எல்லைகள். வடக்கு : 232 ஆம் இலக்க காணி. கிழக்கு : 224 ஆம் இலக்க பாதை. தெற்கு : 231 ஆம் இலக்க காணி. மேற்கு : மஹா ஓயா என்ற எல்லைக்குட்பட்ட பதனேலு பேர்ச் (0ஏ. 0ரூ. 17பே) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம். செடி பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்களாக அத்துடன் மேற் குறிப்பிட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 224 ஆம் இலக்க பாதையைப் பாவிப்பதற்கும் பரிபாலிப்பதற்குமான உரிமையுடன். (E 1095/54 - கேகாலை)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச உதவி பொது முகாமையாளர்,
குருநாகல்/மாத்தளை.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 03 வத்ஹிமி வீதி,
குருநாகல்.

5 - 73

---

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இல. : 182099-ஹேனேகெதர கருணாதிலக்க

24.11.2006 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமாவது-

"ஹேனேகெதர கருணாதிலக்க என்பவர் கடப்பாடுடையவராக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் சார்பில் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஓ. ஆர். பர்னாந்து என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 31.12.2003 ஆந் திகதிய 8517 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது 23.10.2006 ஆந் திகதியன்று உள்ளவாறு இரண்டு இலட்சத்து எண்பத்திநான்காயிரத்து எண்ணூற்றிமுப்பத்தேழு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 2,84,837.47) வருமதியாக உள்ளதாலும்

*இரண்டு இலட்சத்து எண்பத்திநான்காயிரத்து எண்ணூற்றி முப்பத்தேழு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 2,84,837.47) பணத்தொகையையும் அத்துடன் 24.10.2006 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை இரண்டு இலட்சத்து நாற்பத்திநான்காயிரத்து முன்னூற்றறுபத்தாறு ரூபா பதினைந்து சதம் (ரூ. 2,44,366.15) இற்கு 20% வருடாந்த வட்டியும் விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக 8517 ஆம் இலக்க முறியின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனமும் வளவுகளும் கண்டி, வட்டபுலுவ, போமலுவ பாதையில் இல. 83/5 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."*

### அட்டவணை

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹாரிஸ்பத்துவ மெதசியபத்துவ ஹேதெனிய கிராமத்தில் அமைந்துள்ள துனுமண்டலகொல்லவத்த அல்லது துனுமன்டலகொடவத்த (குருநாகலை பாதை வரிப்பண இல. 122-130 வரையுள்ள ஆதனம்) எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் டி. பி. அத்தநாயக்க என்பவரினால் அளவை செய்யப்பட்டு 09.03.1994 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 4133 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 என அடையாளமிடப்பட்டது. இதன் எல்லைகள்- வடக்கு : கால்வாய் மற்றும் மேற்கூறப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் லொட் 2 எனும் வரிப்பண இல. 122 ஆதனமும் ; கிழக்கு : மேற்கூறிய வரைபடத்தில் லொட் 4 ; தெற்கு : மரவேலியும் கே. ஜே. லவ்வனால ஜயதிஸ்ஸ என்பவரினால் உரிமம்கோரப்படும் காணியும்; மேற்கு : மரவேலியும் குருநாகலை-கண்டி பெருந்தெரு நோக்கியுள்ள வீ. சி. பாதையும் ஆகும். இதன் பரப்பளவு பத்து தசம் எட்டு இரண்டு ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.827பே.) ஆகும். அத்துடன் இதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். அத்துடன் மற்றவர்களுக்கும் பொதுவாகவுள்ள பாதையை உபயோகிக்கக்கூடிய சட்டபூர்வமான உரிமையுமுண்டு. இது கண்டி காணிப்பதிவகத்தில் எச் 598/232 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், துனுமண்டலகொல்லவத்த அல்லது துனுமன்டலகொடவத்த (குருநாகலை பாதை வரிப்பண இல. 122-130 வரையுள்ள ஆதனம்) மேற்கூறப்பட்ட காணிக்கு வரைபட இல. 4133 ஆம் இலக்க வரைபடத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட லொட் 3 என அடையாளமிடப்பட்டது. இதன் எல்லைகள்- வடக்கு : குருநாகலை-கண்டி பெருந்தெருவுக்கு அண்மித்த கால்வாய் ; கிழக்கு : மேற்கூறிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட வரிப்பண இல. 126 ; தெற்கு : மேற்கூறிய வரைபடத்தில் லொட் 4 ; மேற்கு : லொட் 2 இல் அமைந்துள்ள வரிப்பண இல. 122 ஆகும். இதன் பரப்பளவு இரண்டு தசம் இரண்டு சைபர் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 2.208பே.) ஆகும். அத்துடன் அதனுள் அமைந்துள்ள வரிப்பண இல. 124 எனும் ஆதனத்திற்கும் மற்றவர்களுக்கும் பொதுவாகவுள்ள பாதையை உபயோகிக்கக்கூடிய சட்டபூர்வமான உரிமையுமுண்டு. இது கண்டி காணிப்பதிவகத்தில் எச் 598/233 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*(திருமதி) ஆர். ஆர். துனுவில,*
*கம்பனிச் செயலாளர்.*

*5-77/2*

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*கணக்கு இலக்கம் : 1900207301*
*கடன் கணக்கு இலக்கம் : 138191 - அஹமட் மீரா சாய்பு மொஹமட் ரிஸ்வி.*

*26.01.2007 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமாவது :-*

*"அஹமட் மீரா சாய்பு மொஹமட் ரிஸ்வி என்பவர் கடப்பாடுடையவராக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். ஆர். ஜயவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 28.12.2001 ஆந் திகதிய 3291 ஆம் இலக்க முறியின் மீதும் மற்றும் 08.02.2003 ஆந் திகதிய 3739 ஆம் இலக்க முறியின் மீதும் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது 30.06.2005 ஆந் திகதியன்று உள்ளவாறு நான்கு இலட்சத்து இருபத்தையாயிரத்து தொழாயிரத்து தொண்ணூற்றொன்பது ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 4,25,999.13) மற்றும் மேற்கூறிய நான்கு இலட்சத்து இருபத்தையாயிரத்து தொழாயிரத்து தொண்ணூற்றொன்பது ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 4,25,999.13) வருமதியாக உள்ளதாலும் அத்துடன் 01.07.2005 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை இரண்டு இலட்சத்து எண்பதாயிரத்து ஐநூற்று எண்பத்தெட்டு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 2,80,588.29) பணத்தொகைக்கு 25% வருடாந்த வட்டியும் ரூபா 1,24,000 பணத்தொகைக்கு 17% வருடாந்த வட்டியும் விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக 3291 மற்றும் 3739 ஆம் இலக்க முறிகளின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் இற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான இதன் கீழ் விவரிக்கப்படும் ஆதனமும் வளவுகளும் கண்டி, வட்டபுலுவ, போமலுவ பாதையில் இல. 83/5, ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் இத்தால் தீர்மானிக்கின்றது."*

### அட்டவணை

*மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை வடக்கு பல்லேசியபத்துவ அலுத்கம உந்துகொடயில் அமைந்துள்ளதும் கொஸ்கஹமுலவத்த எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் லியனகே சிரிபால என்பவரினால் அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 21.09.2001 ஆந் திகதிய 1130 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 2 என அடையாளமிடப்பட்டது. இதன் எல்லைகள் - வடக்கு : மேற்கூறப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் லொட் 1 ; கிழக்கு : கால்வாய் ; தெற்கு : கே. ஐதுருஸ் என்பவரினால் உரிமம் கோரப்படும் காணி (இதற்கு முன்னர் சேகு மொஹமட் என்பவரினால் உரிமம் கோரப்பட்டது) ; மேற்கு : மாத்தளையிலிருந்து கலேவெல வரை செல்லும் பெருந்தெரு ஆகும். இதன் பரப்பளவு பதினொரு தசம் ஒரு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 11.1பே.) அத்துடன் இதனுள்ளடங்கும் மரங்கள் பயிர்கள் மற்றும் சகலதுமாகும்.*

மேற்கூறப்பட்ட லொட் 2 இதன் கீழ் காணும் விதத்தில் மீளவை செய்யப்பட்டது மேற்கூறப்பட்ட அலுத்கம கிராமத்தில் அமைந்துள்ள கொஸ்கஹமுலவத்த எனும் காணித்துண்டின் எல்லைகள் – வடக்கு : இதே காணியின் மிகுதிப் பகுதி ; கிழக்கு : கால்வாய் ; தெற்கு : சேகு மொஹமட் என்பவரின் காணி ; மேற்கு : மாத்தளையிலிருந்து கலேவெல வரை செல்லும் பாதை ஆகும். இதன் பரப்பளவு இரண்டு றூட் (0ஏ. 2றூட் 0பே.) ஆகும். அத்துடன் இதனுள்ளடங்கும் கட்டிடங்களும், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது மாத்தளை காணிப் பதிவகத்தில் டி 383/130 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

5–77/4

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கணக்கு இலக்கம் : 200752– இஸ்மாயில் மொஹமட் ரில்வான்

26.01.2007 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமாவது :–

"இஸ்மாயில் மொஹமட் ரில்வான் என்பவர் கடப்பாடுடைய வராக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். ஆர். ஜயவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11.06.2003 ஆந் திகதிய 3881 ஆம் இலக்க முறியின் மீதும் மற்றும் 18.10.2003 ஆந் திகதிய 4092 ஆம் மற்றும் 20.01.2004 ஆந் திகதிய 4258 ஆம் இலக்க முறியின் மீதும் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது 01.01.2007 ஆந் திகதியன்று உள்ளவாறு நான்கு இலட்சத்து முப்பத்து முவாயிரத்து ஐநூற்று ஒன்பது ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 4,33,509.92) மற்றும் மேற்கூறிய நான்கு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து ஐநூற்று எண்பது ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 4,33,509.92) வருமதியாக உள்ளதாலும் அத்துடன் 02.01.2007 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மூன்று இலட்சத்து ஜம்பத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ. 3,57,500) பணத்தொகைக்கு 30% வருடாந்த வட்டியும் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தால் அவற்றை கழித்து அறவிடுவதற்காக 3881, 4092 மற்றும் 4258 ஆம் இலக்க முறிகளின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் இற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான இதன் கீழ் விவரிக்கப்படும் ஆதனமும் வளவுகளும் கண்டி, வட்டபுலுவ, போமலுவ பாதையில் இல. 83/5 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதார் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை வடக்கு பல்லேசியபத்துவ அலுத்கம உந்துகொடயில் அமைந்துள்ளதும் கொபெய்கலஹேன எனும் வத்த எனும் கொப்பேவெலஹேன எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். ஜயசேக்கர என்பவரினால் அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 09.07.1989 ஆந் திகதிய 1242 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 6 என அடையாளமிடப்பட்டது. இதன் எல்லைகள் – வடக்கு : வரைபட இல. 1242 இன் பிரகாரம் லொட் 5 ; கிழக்கு : மாத்தளையிலிருந்து கலேவெல நோக்கிச் செல்லும் பாதை ; தெற்கு : எஸ். எம். ஜுனைதீன் என்பவரினால் உரிமம் கோரப்படும் காணி; மேற்கு : மொஹிதீன் அப்துல் காதர் என்பவரினால் உரிமை கோரப்படும் காணி ஆகும். இதன் பரப்பளவு முப்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 30பே.) ஆகும் அத்துடன் இதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள மற்றும் இணைக்கப்பட்டுள்ள இயந்திர உபகரணங்கள் மற்றும் சகலதுமாகும். இது மாத்தளை காணிப் பதிவகத்தில் டி455/165 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

5–77/3

---

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0170–114792–001–(கண்டி கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2007.03.05 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:–

"கண்டியில் ரி. கே. மோட்டர் டிரேடர்ஸ் என்ற பெயர் மகுடத்தினதும் நிறுவனத்தினதும் கீழ் தனியுரிமை வியாபாரத்தை நடத்துகின்ற சமரக்கோன் முதியன்செலாகே டிக்கிரி பண்டா என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். பரம்சோதி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999, பெப்புருவரி 1 ஆந் திகதிய 223 ஆம் இலக்க, 2001, மே 15 ஆந் திகதிய 603 ஆம் இலக்க மற்றும் 2001, நவெம்பர் 7 ஆந் திகதிய 688 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார் ஆதலால், இப்பொழுது 2004, திசெம்பர் 31 ஆந்

திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது முப்பத்திநான்கு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து இருபத்தொரு ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 34,89,021.78) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட முப்பத்திநான்கு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து இருபத்தொரு ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 34,89,021.78) பணத்தொகையையும் 2005, சனவரி 1 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்திமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 223, 603 மற்றும் 668 ஆம் இலக்க முறிகளினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படு வதுமான ஆதனங்கள் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாம் அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் குடாகல்பட கோறளேயின் வியுத வில்லிஹத்பத்துவில், வெவ கெதரவில் அமைந்துள்ள அபேநியவத்த என்றழைக்கப்படுவதும் அறியப்படுவது மான காணியின் பகுதியாயுள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் செனரத் விஜேரத்னவால் தயாரிக்கப்பட்ட 1993, சனவரி 31 ஆந் திகதிய 1825 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 9 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லா வற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 9 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீட்டின் எல்லைகள்- வடக்கு : அதே வரைபடத்தில் துண்டு 8 ; கிழக்கு : வரைபடம் இல. 1562 இல் துண்டு 2 ; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இகல. 1825 இல் துண்டு 10 ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 21. இது பதினாறு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 16.5பே.) விஸ்தீரணமுள்ளது.

மேலே சொல்லப்பட்ட அபேநியவத்த என்றழைக்கப்படும் காணியின் பகுதியாயுள்ளதும் மேலே சொல்லப்பட்டவாறு 1825 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 10 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப் பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 10 எனக் குறிக்கப்பட்ட காணிப் பங்கீட்டின் எல்லைகள்- வடக்கு : சொல்லப்பட்ட காணியின் துண்டு 9 ; கிழக்கு : வரைபடம் இல. 1562 இல் துண்டு 3 ; தெற்கு : வரைபடம் இல. 53டி/91 இல் துண்டு 1 ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1825 இல் துண்டு 11 மற்றும் 21 எனக் குறிக்கப்பட்ட வீதி ஒதுக்கம். பதினான்கு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 14.5பே.) விஸ்தீரணங்கொண்ட இது சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டுகள் 21 மற்றும் 22 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடுகளின் மேலாகத் தற்போதுள்ள வழி உரிமையும் அணுகுவழிகளும் கொண்டதாக.

### இரண்டாம் அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் பாத்தஹேவாஹெட்டவின் கம் தஹய கோறளேயின் பல்லேகம, அம்பிட்டியவில் அமைந்துள்ள "ரத்தகஸ்பனவெவதென்ன" என்றழைக்கப்படும் காணியின் பகுதியாயுள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. வீரப்பனவால் தயாரிக்கப்பட்ட 1988, யூலை 17 ஆந் திகதிய 234 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள வீடு, மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணிப் பங்கீட்டின் எல்லைகள்- வடக்கு: சொல்லப்பட்ட வரைபடம் இல. 704 இல் துண்டு 11 ; கிழக்கு : வரைபடத்தில் துண்டு 2 மற்றும் பளீலுக்குச் சொந்தமான காணி ; தெற்கு : துண்டுகள் 2 மற்றும் 3 உம் ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 704 இல் துண்டு 7. இது பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணமுள்ளது.

### மூன்றாம் அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் யட்டிநுவரவின் கங்காவத்த கோறளேயின் கண்டி மாநகரசபை எல்லைகளினுள் மஹியாவையில் கட்டுகஸ்தோட்டை வீதியில் அமைந்துள்ள "வெலிக்கந்த" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரி. பி. அத்தநாயக்கவால் தயாரிக்கப்பட்ட 1992, ஓகத்து 18 அந் திகதிய 2984 ஆம் இலக்க மூலவரைப்படத்தைக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ரி. பிராங்க் டயசினால் 1998, ஒற்றோபர் 9 ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்டதில் உட்பிரிவாயுள்ளதுமான துண்டு 3B எனக் குறிக்கப்பட்ட காணிப் பங்கீடு முழுவதும் அதன்கண் மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. துண்டு 3B எனக் குறிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணிப் பங்கீட்டின் எல்லைகள்- வடக்கு : ரெயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணி ; கிழக்கு: வரைபடம் இல. 742/A இல் துண்டு P ; தெற்கு : கண்டியிலிரந்து கட்டுகஸ்தோட்டைக்குச் செல்லும் பெருவீதி ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 2984 இல் துண்டு 3A. சொல்லப்பட்ட வரைபடத்தின்படி இது பதினைந்து தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.5பே.) விஸ்தீரணமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பதில் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்-சட்டம்.

5-97/1

---

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0480-650472 0-001-(மாவனெல்ல கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2007.02.12 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில்

பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கடுகண்ணாவையைச் சேர்ந்த மொஹமட் சலீம் நூர்தீன் என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். டி. பி. அபயரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998, பெப்புருவரி 11 ஆந் திகதிய 601 ஆம் இலக்க மற்றும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஜி. ஐ. கம்லத் என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2003, ஏப்பிறல் 23 ஆந் திகதிய 671 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார் ஆதலால், இப்பொழுது 2004, ஏப்பிறல் 1 ஆந் திகதியன்றுள்ளவாறுக சொல்லப்பட்ட முறிகளின்மீது முப்பத்தைந்து இலட்சத்து எழுபத்தெண்ணாயிரத்து நூற்றித் தொண்ணூற்றிமூன்று ரூபா (ரூ. 35,78,193) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட முப்பத்தைந்து இலட்சத்துக எழுபத் தெண்ணாயிரத்து நூற்றித்தொண்ணூற்றி மூன்று ரூபா (ரூ. 35,78,193) பணத்தொகையையும் 2004, ஏப்பிறல் 2 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்திமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப் பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 601 மற்றும் 671 ஆம் இலக்க முறிகளால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப் பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ரி. சி. சேனாநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளரின் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டம், லகமுவ உடுநுவர கந்து பலாத்தவில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் சி. டி. ஆரதிஹெட்டி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993.04.17 ஆந் திகதிய 1631 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்டு வரையறுத்துக் காட்டப்பட்டதுமான "கட்டுகஹமுல்ல வத்த பெலுங்கல வத்த"வுக்கு அருகிலுள்ள காணியின் பகுதி. பதினெட்டு தசம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 18.3பே.) விஸ்தீரணமுள்ள இதன் எல்லைகள்- வடக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தின் துண்டு 1, வேலி மற்றும் பெலுங்கல வத்த ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தின் துண்டு 3 ; தெற்கு : துண்டு 4 எனக் குறிக்கப்பட்ட வீதி வழி ; மேற்கு : பெலுங்கல வீதி. இது கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் சி 293/ 160 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டம், லகமுவ உடுநுவர கந்து பலாத்தவில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் சி. டி. ஆரதிஹெட்டி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993.04.17 ஆந் திகதிய 1631 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4 எனக் குறிக்கப்பட்ட காணி. ஒன்று தசம் ஏழு பேர்ச்சஸ் (10ஏ. 0றூ. 1.7பே.) விஸ்தீரணமுள்ள இதன் எல்லைகள்- வடக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தின் துண்டு 2 ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தின் துண்டு 3 ; தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கு : பெலுங்கல வீதி. இது கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் சி 293/ 161 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பதில் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்-சட்டம்.

5-97/ 2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்**.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம்** :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|
| (அ) I வது பகுதி | 31.00 | 5.00 |
| II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) I வது பிரிவு | 10.00 | 5.00 |
| II வது பிரிவு | 12.00 | 5.00 |
| III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2007***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 04.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.04.2007 |
| | | வெள்ளி | 11.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.04.2007 |
| | | வெள்ளி | 18.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.05.2007 |
| | | வெள்ளி | 25.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.05.2007 |
| **யூன்** | .. | வெள்ளி | 01.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2007 |
| | | வெள்ளி | 08.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2007 |
| | | வெள்ளி | 15.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2007 |
| | | வெள்ளி | 22.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2007 |
| | | வெள்ளி | 29.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.06.2007 |
| **யூலை** | .. | வெள்ளி | 06.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2007 |
| | | வெள்ளி | 13.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2007 |
| | | வெள்ளி | 20.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2007 |
| | | வெள்ளி | 27.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.